**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.5/2024**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 29 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஏழுமலை | மதம் | : இந்து |
| த/பெ | : சுப்பிரமணி | ஜாதி | : -- |
| வயது | : 55 | கிராமம் | : V.C.R கண்டிகை |
| தொழில் : | விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**29.10.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 2008, 2015ல் நான் சொத்தை கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். 2015ல் நான் கிரையம் வாங்கிய நாராயணன், நரசம்மாளுக்கு சொத்து எப்படி வந்தது என்பது என்னால் சொல்ல முடியுமா என்றால் பூர்வீகமாக வந்தது. பூர்வீகமாக எப்படி வந்தது என்றால் அவர்கள் பாட்டன் வழி சொத்து ஆகும். செங்கல்வராயன் என்ன உறவு என்றால் நாராயணன், நரசம்மாளுக்கு அப்பா ஆவார். செங்கல்வராயனின் அப்பா பெயர் கந்தேசன் என்றால் சரிதான். கந்தேசனுக்கு ரங்கப்பன், சின்னய்யன், செங்கல்வராயன் ஆகிய 3 மகன்கள் என்றால் சரிதான். ரங்கப்பன், சின்னய்யன், செங்கல்வராயன் ஆகியோரின் பூர்வீக கூட்டு குடும்ப சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ன் மூலம் 2008ல் பார்வதி வகையறாவிடம் நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ 1 ஆவணத்தில் பக்கம் 5ல் சொத்து விவரத்தில் **"சின்னய்யன் வகையறா பாகம் பிரிக்காத நிலத்திற்கு (வடக்கு)"** என சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிக்க தெரியாது. வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள சின்னய்யன் கந்தேசன் சொத்தின் பாகம் பிரிக்கப்படாத ஒரு பங்குதாரர் என்றால் அண்ணன், தம்பி 3 பேருக்கும் பங்கு உள்ளது. 2008ல் நான் கிரையம் வாங்கும்போதே பாகம் பிரிக்கப்படாத கூட்டு சொத்து என வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ளது என்றால் பாகம் பிரித்த பின்பு நில அளவை செய்துதான் நான் வாங்கினேன். அந்த சொத்து எப்போது பாகம் ஆனது

என்பதை காட்ட நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. பாகம் பிரிக்கப்படாத சொத்திற்கு என் இஷ்டப்படி நான்கு எல்லை குறிப்பிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் குறிப்பிட்டுள்ள நான்கு எல்லைகள் தவறானது என்றாலும் பாகம் பிரித்த பின்பு நில அளவை செய்துதான் நான் வாங்கினேன்.

3. வழக்கு சொத்து பாகம் பிரிக்கப்பட்டதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் வரப்பு போட முயற்சி செய்ததை கஜேந்திரன் வகையறா தடுத்ததை நான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். எனது பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு சொத்தில் நான் வரப்பு போட முயற்சி செய்ததை கஜேந்திரன் வகையறா தடுத்ததாக சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். அவர்கள் வரப்பு போடுவதை தடுத்தார்கள். வரப்பு இல்லாத இடத்தில் நான் வரப்பு போட முயற்சி செய்தேன் என்றாலும் அதை பிரதிவாதிகள் தடுத்தார்கள் என்றாலும் சரியல்ல. ஏற்கனவே வரப்பு இருந்தது. வரப்பு இல்லை என்ற விவரத்தை மறைக்க வேண்டிதான் நான் பிரமாண வாக்குமூலத்தில் அதை குறித்து சொல்லவில்லை என்றால் சரியல்ல.

4. கஜேந்திரன் வகையறா என் சொத்தில் மேற்கு பக்கம் பிரச்சனை செய்வதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். வழக்கு சொத்தை நிலஅளவையர் வைத்து அளந்ததாக நான் சொல்வது எந்த தேதி என்றால் ஞாபகமில்லை. நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள தேதியில்தான் அளந்தேன் என்றால் ஆமாம். அதற்கு முன்பு நான் வழக்கு சொத்தை அளக்கவில்லை என்றால் நான் கிரையம் வாங்கிய பின்புதான் அளந்தேன். 03.10.2023ல் தாவா சொத்தின் எல்லைகளை நிலஅளவையர் அளந்து அத்து காட்டினார் என நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அண்ணன் தம்பிகளில் மேற்கு பக்கம் ஒருவருக்கும் அதற்கு அடுத்து கிழக்கே ஒருவரும் அதற்கு அடுத்து கிழக்கே ஒருவரும் என வரிசையாக அனுபவித்து வந்தார்கள் என்றால் மேற்கே கஜேந்திரன், அதற்கு அடுத்து கிழக்கே நான் அனுபவித்து வந்தேன்.

5. பாகம் பிரிக்கப்படாத சொத்தை சின்னய்யன் வகையறா வடக்கேயும், அதற்கு அடுத்து தெற்கே செங்கல்வராயனும் அதற்கு அடுத்து தெற்கே சுப்பிரமணியும் அனுபவித்து வந்தார்கள் என்றால் அப்படியில்லை. மேற்கே கஜேந்திரனும் அதற்கு

கிழக்கே எங்களுடையதும், அதற்கும் கிழக்கே மற்றொரு செங்கல்வராயன் உள்ளார்கள். தென்வடலாக அனுபவித்து வந்த சொத்தில் வடக்கு பக்கம் உள்ள என் சொத்திற்கு வழி இல்லை என்பதற்காக பாகம் பிரிக்கப்படாத சொத்தில் வழி இருப்பதாக நான் வேண்டுமென்றே பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே கிழக்கு மேற்காக அனுபவித்து வந்திருந்தால் தெற்கு பக்கம் பிரச்சனை இருப்பதாக நான் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. தெற்கு பக்கம் சாலை உள்ளது என்றால் சரிதான். அதனால்தான் நான் கஜேந்திரன் வகையறா மேற்கே பிரச்சனை செய்கிறார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு உள்ளே 3 ஏக்கர் சொத்து உள்ளது. அந்த 3 ஏக்கர் செல்வதற்காக வேண்டி பாதைக்காக இந்த சொத்தை வாங்கினேன். தற்போதுதான் என் சொத்திற்கு தெற்கே பாதை போடப்பட்டுள்ளது.

6. என் சொத்திற்கு எந்த பக்கம் வேலிக்காத்தான் முள் போட்டார்கள் என்றால் ரோடு பக்கம் போட்டார்கள். ரோடு எந்த பக்கம் உள்ளது என்றால் வடக்கே உள்ளது. வடக்கு பக்கம்தான் முள் போட்டார்களா என்றால் ஆமாம். ரோடு எந்த பக்கம் உள்ளது என்றால் தெற்கே உள்ளது. தெற்கு பக்கம்தான் முள் போட்டார்களா என்றால் ஆமாம். நான் தெற்கே உள்ள பிரச்சனையை மேற்கே என்று காட்டி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வடக்கு தெற்காக உள்ள சின்னய்யா வகையறாவின் பாகம் பிரிக்கப்படாத சொத்தை எனக்கு சாதகமாக என் இஷ்டத்திற்கு நான்கு எல்லைகளை கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டு வாங்கியுள்ளேன் என்றாலும் அந்த கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள எல்லைகள் செல்லாது என்றாலும் சரியல்ல.

7. நான் உண்மையை மறைத்து கிரைய ஆவணம் தயார் செய்ததால் எனது பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் முன்னுக்கு பின் முரணாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையை மறைத்து நீதிமன்றத்தை அணுகியுள்ளதால் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பாகம் பிரிக்கப்படாத சொத்தில் குறிப்பிட்ட பாகத்திற்கு தடை உத்தரவு கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. ஒரு கூட்டு உரிமையாளர் மற்றொரு கூட்டு உரிமையாளர் மீது தடை உத்தரவு கோர முடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து வடக்கு தெற்காக தான் இன்றுவரை வரப்பு உள்ளது என்றாலும் அந்த வரப்புகளை நான் அகற்ற முயற்சி செய்தேன் என்றாலும் இல்லை. வரப்பு எந்த பக்கம் இருந்தது என்றால்

வடக்கு தெற்காகதான் உள்ளது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் கிழக்கு மேற்காகதான் வரப்பு இருந்தது என்றாலும் இல்லை. வடக்கு தெற்காகதான் வரப்பு இருந்தது.

8. நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் என் மகனை கஜேந்திரன் தம்பி பாஸ்கர் வெட்டிவிட்டார். அதனால் நாங்கள் புகார் கொடுத்தோம். அவர்கள் எங்கள் மீது புகார் கொடுத்தார்களா என்றால் ஆமாம். அதற்கு எங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். நான் கிழக்கு மேற்காக வரப்பை அழிக்க முயற்சி செய்ததால் பிரச்சனை வந்தது என்றாலும் நான்தான் பிரதிவாதிகளை தாக்கிவிட்டேன் என்றாலும் அவர்கள்தான் பிரச்சனை செய்கிறார்கள். நான் பிரச்சனை செய்யவில்லை. நேற்று முன்தினமும் அவர்கள் பிரச்சனை செய்தனர். நான் அந்த சொத்தில் அனுபவத்திலேயே இல்லை என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள புல வரைபடங்கள் தவறானது என்றாலும் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)